## மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1966ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக்கணக்குகள், பின்னிணைப்பு IIஇல் உள்ள 6ஆம் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளன. 1965ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:-

| | மாற்றம் | |
|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புகள் ... | + 105·8 | + 7·4 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் ... | — 9·1 | — 0·9 |
| கேள்வி வைப்புக்கள் ... | + 114·8 | + 27·3 |
| (இவற்றில் வர்த்தக வங்கிகள்) ... | — 50·4 | — 36·0 |
| சர்வதேச ஒதுக்கு நிதி ... | — 139·1 | — 49·3 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் ... | + 218·7 | + 16·2 |
| அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ... | + 155·9 | + 14·1 |

\+ ஏற்றம்

— இறக்கம்

மத்திய வங்கியின் ஸ்டேர்லிங், ஐக்கிய அமெரிக்க டொலர், மாற்று வீதங்களில் இவ்வாண்டு எவ்வித மாற்றங்களும் ஏறபடவில்லை. இவ்வீதங்களானவை :-

| | | தந்திமாற்றுக் கொள்வனவு. | தந்திமாற்று விற்பனவு. |
|---|---|---|---|
| ஸ்டேர்லிங் (இலங்கை ரூபாய்க்கு) | உடன்மாற்று | 1சி 6 3/64பெ. | 1சி. 6 1/32பெ. |
| | பின்மாற்று (ஆறுமாதங்கள்வரை) | உடன்மாற்றுக்கெதிராக 1/128 பெ.மாதாந்தக்கழிவு | உடன்மாற்றுக்கு எதிராக 1/128 பெ. மாதாந்தக் கட்டணம் |
| ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (100க்கு) | உடன்மாற்று | ரூ 477.00 | ரூ 477.25 |
| | பின்மாற்று (6 மாதங்கள் வரை) | ரூ 477.00 | உடன்மாற்றுக்கு எதிராக -/25சத மாதாந்தக்கட்டணம் |

1966 யூன் 6ஆந் தேதியில் ஏற்பட்ட இந்திய ரூபாவின் மதிப்பிறக்கத்தால், இந்திய ரூபாய்களுக்கான மத்திய வங்கியின் நாணய மாற்று வீதங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டன.

| | | தந்திமாற்றுக் கொள்வனவு. | தந்திமாற்று விற்பனவு. |
|---|---|---|---|
| இந்திய ரூபாய்கள் (100க்கு) | உடன்மாற்று | ரூ 63 5/16 | ரூ 63 3/8 |
| | பின்மாற்று (6 மாதங்கள்வரை) | உடன்மாற்றுக்கு எதிராக ரூபாயில் 1/32 மாதாந்தக் கழிவு | உடன்மாற்றுக்கு எதிராக ரூபாயில் 1/32 மாதாந்தக் கட்டணம் |

மத்திய வங்கியின் அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்னிணைப்பு II இல் உள்ள அட்டவணை 11இல் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்கப் பிணைகளுக்கும், ''யூசன்ஸ்'' வாக்குறுதிப் பத்திரங்களிற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட சில குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களினால் எழுந்த முற்பணங்களுக்கான மத்திய வங்கியின், வட்டி வீதங்களில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. இவ்வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 5சத வீதமாக இருந்தது. கூட்டுறவுச் சங்கங்களின் உள்நாட்டில் விளைந்த விவசாயப் பொருட்களின் கொள்வனவு, விற்பனவு அல்லது களஞ்சியத்திடுகையினால் எழுந்த ''யூசன்ஸ்'' வாக்குறுதிப் பத்திரங்களிற்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் மாற்றமுறாது ஆண்டொன்றுக்கு 3 சதவீதமாகயிருந்தது. இறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவு வீதம் கடைசியாக ஏற்கப்பட்ட சராசரிக் கேள்வி வீதத்தின் மேல் ஆண்டிற்கு 1/8 சதவீதம் அதிகமாகத் தொடர்ந்தும் நிலைத்திருந்தது. கொடுகடன் நிலையங்களுக்கும் மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மீள நிதியீட்டற் கடன்களின் மீதான வட்டி வீதங்கள் பின்வருமாறு:--

| | |
|---|---|
| கைத்தொழில் அல்லது விவசாய அபிவிருத்திக்கு அல்லது வளர்ச்சிக்கு | ஆண்டொன்றுக்கு 3% (இவ்வசதியினைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள் ஆண்டொன்றுக்கு 6% மேல் வட்டி அறவிடாது இருப்பின்). |
| வர்த்தக வணிக, அல்லது வியாபார அபிவிருத்திக்கு அல்லது வளர்ச்சிக்கு. | ஆண்டொன்றுக்கு 5%. |
| தேயிலைக் கட்டுப்பாட்டாளர், செலுத்தப் படவிருக்கும் வட்டியின் ஒரு பாகத்திற்குப் பொறுப்பாயிருப்பின், தேயிலை எந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கும், புதியதொழிற்சாலைகள் அமைப்பதற்கும். | ஆண்டொன்றுக்கு 5% (இவ்வசதியினைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள் ஆண்டொன்றுக்கு 8% மேல் வட்டி அறவிடாது இருப்பின்) |

**நாணய வெளியீடு**

1966ஆம் ஆண்டில் ரூ 2/-, ரூ5/- இனங்களில் புதிய அமைப்பைக் கொண்ட நாணயத்தாள்கள் வெளியிடப்பட்டன; ரூ 2/- நாணயத்தாள் மாச்சு மாதத்திலும், ரூ 5/- நாணயத்தாள் திசெம்பர் மாதத்திலும் வெளியிடப்பட்டன. இவ் ரூ 2/- நாணயத்தாளின் முற்பக்கம் பெரும்பாலும் மண்நிறத்தில், மத்தியிலிருந்து கீழ்க்கரைவரை பரந்து காணப்படும் பல நிறங்களைக் கொண்ட நுட்பமான வண்ணத்தின் மேல் அச்சிடப்பட்டிருக்கின்றது. நாணயத்தாளின் வலக்கைப் பக்கத்திலுள்ள ஒரு சட்டத்தினுள் மகாபராக்கிரமபாகு அரசனினுடையதென மரபு வழி கொள்ளப்படும் சிலையின் உருவப்படியும், இடக்கைப்பக்கத்திலுள்ள ஒருசட்டத்தினுள் ''பேரவைச் சிங்கத்தின்'' நீர்ப் பொறியும் காணப்படுகின்றன. இந் நாணயத்தாளின் அளவு $4\frac{1}{2}'' \times 2\ 5/16''$ ஆகும். உலோகத்தினாலான நூலொன்று நாணயத்தாளின் வலது கைப்பக்கத்தினுள் நிலைக்குத்தாக அடக்கப்பட்டிருக்கின்றது. நாணயத்தாளின் பின்புறமும் மண்நிறத்தினதாயும், மெடிறிகிரியவிலுள்ள வட்டடகேயின் உருவப்படியைத் தாங்கியுள்ளதாயும் உள்ளது. வலக்கைப் புறத்திலுள்ள சட்டம், வேறுபடும் அளவுடைய நுண்ணிய எழுத்து வடிவங்களால் நிரப்பப்பட்டுள்ளது. இவ்வெழுத்துக்கள் நாணயத்தாளின் மேற்பக்கம் வரையும் பரந்துள்ளன,

ரூ 5/- நாணயத்தாளின் முற்பக்கம் பெரும்பாலும் சிவப்பு, பழுப்பு நிறத்தில் மத்தியிலிருந்து கீழ்க்கரை வரை பரந்து காணப்படும் பலநிறங்களைக் கொண்ட நுட்ப மான வன்னத்தின் மேல் அச்சிடப்பட்டிருக்கிறது. நாணயத்தாளின் வலக்கைப்பக்கத் திலுள்ள ஒரு சட்டத்தினுள் மகாபராக்கிரமபாகு அரசனினுடையதென மரபு வழி கொள்ளப்படும் பொல்லநறுவையிலுள்ள சிலையின் உருவப் படியும், இடக்கைப்பக்கத் திலுள்ள ஒரு சட்டத்தினுள் ''பேரவைச் சிங்கத்தின்'' நீர்ப்பொறியும் காணப்படுகின்றன. நாணயத்தாளின் அளவு 4 15/16" × 2½" ஆகும். உலோகத்திலான நூலொன்று நாணயத்தாளின் வலது கைப்பக்கத்தினுள் நிலைக்குத்தாக அடக்கப்பட்டிருக்கிறது. நாணயத்தாளின் பின்புறத்தில் ஒரு சட்டத்தினுள் பொல்லநறுவையிலுள்ள சபை மண்டபத்தில் நிசங்கமல்ல அரசனின் பீடத்தைத் தாங்கிய ''கற்சிங்கத்தின்'' உருவப்படி யொன்று சிவப்பு நிறத்தில் அழுத்தப்பட்டிருக்கின்றது. வேறுபடும் அளவுடைய நுண் ணிய எழுத்து வடிவங்களால் இருபக்கங்களிலுமுள்ள சட்டங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன·

இப்புதிய அமைப்பையுடைய நாணயத்தாள்கள், முன்பு வெளியிடப்பட்ட சட்டரீதி யாகத் தொடர்ந்தும் இருக்கும் நாணயத்தாள்களுடன் சுற்றோட்டத்தில் இருக்கின்றன·

**வருமானமும் செலவும்**

இந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருமானம் ரூ 20,904,377 ஆகும். இவ் வாண்டிற்கான செலவு, வங்கிக்கட்டிடப் பெறுமதியின் மதிப்பிறக்கத்திற்கான ஏற்பாடும் உட்பட, ரூ. 18,535, 359 ஆக விளங்கியது. நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 39 (அ) பிரிவின்படி ரூ. 2,369,018 ரூபாய்களைக் கொண்ட தேறிய இலாபமானது, 1965ஆம் ஆண்டில் மேற்படி சட்டத்தின் 40ம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட நாணயச் சீர்திருத் தக் கணக்கைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. தற்போது இக்கணக்கிலுள்ள நிலுவை ரூ. 106,263ஆகும்.

**வங்கி மேற்பார்வை**

வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது, நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 29 (1) பிரிவின் கீழ் ஆறு வர்த்தக வங்கிகளை 1966ம் ஆண்டின்போது பரிசோதனை செய் தது. இத் திணைக்களம் வங்கிகளிற் கணக்குகள் திறப்பதோடு தொடர்புள்ள 1961ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 111ம் பகுதியினை இயக்குவதோடு சம்பந்தப்பட்ட கடமைகளை, தொடர்ந்தும் ஆற்றிவந்தது.

1965ஆம் ஆண்டு திசெம்பர் 22ஆம் தேதி நாணயச்சபை எடுத்துக்கொண்ட தீர்மானத் தின் நியதிகளின்படி, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப் பட்ட அபிவிருத்தி நிதிப்பகுதியானது, 1966ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீட்டில் அலுவ லாளருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை மேற்கொண்டது. இத்திட்டத்தினை மேற் கொண்டு இரு அலுவலாளர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் ஒருவர் கனடா விலும், ஐக்கிய அமரிக்காவிலும் மற்றவர் ஜப்பானிலும் பயிற்சி பெற்றனர். ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிலையத்தினலும் திட்ட அமைப்பு பொருளாதார அலுவல் அமைச்சினலும் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்ட திட்ட உருவாக்க, மதிப்பீட்டு பயிற்சி ஆலையில் இவ்வாண்டு முடிவில் பங்குபற்றுவதற்காக இப்பிரிவின் தலைவரும் மத்திய வங்கியின் இன்னெரு அலுவலாளரும் வங்கியால் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்போது இப்பிரிவில் இச்சிறப்புத் துறையில் பயிற்சி பெற்ற அலுவலாளர்கள் கரு ஒன்று உள்ளது. இவர்களின் சேவை அபிவிருத்தித் திட்ட மதிப்பீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடியதாயிருக்கும்.